தென்னாட்டுப் பழங்கள்

ஆசிரியர்:
ச. கு. கணபதி ஐயர், பி.ஓ.எல்.

கிராமஜோதி நூலகம்
4, சையத் அகமத் உஸேன் தெரு,
மயிலாப்பூர் :: சென்னை - 4

உரிமை பதிவு] 1950 [விலை அணா 3

தென்னாட்டுப் பழங்கள்

1. பழக்கலை

வெறும் விவசாயத்தில் கத்தரிப்போ (Pruning) ஒட்டுச் சேர்த்தல் முதலிய இனப் பெருக்க முறைகளோ பழங்களின் சேமிப்பு முறைகளோ இல்லை. கலையறிவினால் வளர்ச்சியுற்றவை இவை. இவைகளைப் பெற்றுள்ள பழ உற்பத்தி இதனால் கலையாயிற்று.

கலப்புணவு ஆராய்ச்சி, உணவில் பழங்களின் இன்றியமையாமை, பழங்களை நீண்ட நாள் வேறு ரூபங்களில் சேமித்து வைக்கும் முறைகள், அவற்றைத் தூர தேசங்களுக்கு அனுப்பும் போக்கு வரவு வசதிகள் முதலியன தோன்றியபிறகு பழங்களுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

'இந்த நாட்டு மண்ணில் எத்தகைய பழத்தையும் உண்டாக்கலாம்; சீதோஷ்ணத்தைச் செயற்கை முறைகளால் சரி செய்து கொள்ளலாம்' என்ற ஆராய்ச்சியைச் சிலர் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். காபூல்மாதுளை, ஆஸ்திரேலியாத் திராக்ஷை, மத்தியதரைப் பிரதேசத்துப் பழங்கள் முதலியன தென்னாட்டு மண்ணில் இன்று உற்பத்தியாவது நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. என்றாலும் இக்கலை இரண்டொருவரிடம் இருத்தல் போதாது. பலருக்கும் பரவ வேண்டும்.

மண் மோசமாக இருந்தால் செயற்கை முறையில் புதிய மண்ணைச் சேர்க்கலாம். நம் நாட்டு மண்ணில் வளராத புதிய செடியை வளர்க்க வேண்டுமானால் அதற்கு இனமான நம் நாட்டுச் செடியை அடிக்கன்றாக வைத்துக் கொண்டு அப்புதிய செடியுடன் ஒட்டுப் போடலாம். காற்றடைப்பு வேலிகள், நிழலில் செடிகளைப் பயிரிடுதல் முதலிய முறைகளால் சீதோஷ்ணங்களுடன் போராடி வெற்றி பெறலாம். பழக்கலை இவைகளைப் போன்ற பல யோசனைகளைக் கூறுகின்றது.

2. பெயர் பெற்றது தென்னாடு

சென்னை மாகாணமே இந்தியாவில் மற்ற மாகாணங்களை விடப் பழ உற்பத்தியில் தலைசிறந்து நிற்கிறது. எப்படி என்று பார்ப்போம்:

1. எல்லா வகைகளும் இங்கே உண்டு; தென்னாடு உஷ்ணப் பிரதேசம்; ஆயினும் இங்கே நீலகிரி, கோடைக்கானல் முதலிய உயர்ந்த மலையிடங்கள் இருக்கின்றன. சமுத்திர மட்டத்திலிருந்து மலைப்பிரதேசத்துக்குப் போகப் போக உஷ்ணம் குறைந்து குளிர் அதிகமாகி வரும் என்பது உங்களுக்குத் தெரியும். நம் நாட்டு மலைப் பிரதேசங்களின் உச்சிகள் குளிர்ப் பிரதேசங்களாகவும், சரிவுகள் மித உஷ்ணப் பிரதேசங்களாகவும் அமைந்துள்ளன. இந்த இடங்களில் எல்லாம் அந்த அந்தப் பிரதேசத்துக்கு உரிய ஆப்பிள் முதலிய மலைப்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2. விளைவின் பரப்பு அதிகம்: நம் .நாட்டில் முக்கியமான பழங்கள் எங்கெங்கே எவ்வளவு ஏகர் விஸ்தீரணத்தில் உற்பத்தியாகி வருகின்றன என்று மாகாண அரசாங்கத்தார் கணக்கெடுத் திருக்கிறார்கள். 1944க்குப்பின் அவர்களுடைய கணக்குப் பின் வருவதாகும்:

மரம்	ஏகர்	
மா	250	ஆயிரம்
வாழை	150	,,
கிச்சிலி வகை ...	50	,,
முந்திரிப் பழம் ...	50	,,
வேறு பழங்கள் ...	50	,,

இவ்வளவு பரப்புள்ள நிலத்தில் பழச்சாகுபடியாவது வேறு எந்த மாகாணத்திலும் இல்லை. ஆகவே உற்பத்திப் பரப்பிலும் நம் மாகாணமே முதலிடம் பெற்றிருக்கிறது.

3. பழங்களின் உயர்ந்த தன்மை: மாம்பழம் என்று ஒரு வகையை எடுத்துக் கொண்டால் தென்னாட்டு மாம்பழத்துக்கு வேறு எந்த மாகாணத்து மாம்பழமும் ஈடாகாது. ஆரஞ்சை எடுத்துக் கொண்டால் நம் நாட்டுச் சாத்துக்குடி ஆரஞ்சுக்கு நிகரான பழம் வேறிடங்களில் கிடையாது. இந்த மாதிரி வாழை முதலிய வேறு சில பழங்களும் இங்கேதான் சிறப்பாக உள்ளன.

4. ஒரு பழத்தினுள்ளும் பல ரகங்கள்: மாம்பழத்தை எடுத்துக் கொண்டால் அதில் நடுச்சாலை, குண்டு, பங்களூரா, நீலம், பங்கனபல்லி, பீதர் முதலிய பல வகைகள் இங்கே உள்ளன. மாவகைகள் சுமார் முந்நூறுக்கும் மேலுள்ளன என்று பழ ஆராய்ச்சியாளர் கணக்கிட்டிருக்கிறார்கள். வாழையிலும் பூவன், ரஸ்தாளி, மொந்தன், பேயன், பச்சை வாழை, மலை வாழை, நேந்திரம் முதலிய பல ரகங்கள் மாகாண மெங்கும் பரவியிருக்கின்றன. இத்தனை தினுசுகள் வேறு எந்த மாகாணத்திலும் இல்லை.

3. பொருளாதார மதிப்பு

இங்கே பழங்கள் அதிகமாக விளைவதனால் நாம் வேறு மாகாணங்களுடன் பழவியாபாரம் வைத்துக்

கொண்டிருக்கிறோம். இத் துறையில் நமக்கு நிரம்ப வருவாய் உண்டு. பழத்தோட்டக்காரர்கள் தென்னாட்டில் அதிக லாபம் பெறுவது போல் வேறு எந்த மாகாணத்திலும் பெறுவதில்லை. இவைகளுக்குக் காரணங்களை ஆராய்வோம்.

1. உற்பத்தியில் பருவ வேறுபாடுகள் அனுகூலமாக உள்ளன: நம் நாட்டின் இயற்கை எப்படி அமைந்திருக்கிற தென்றால் ஒரு பழத்துள்ளும் எல்லா ரகங்களும் ஒரே காலத்தில் பலத்துக்கு வராமல் இரண்டொரு மாதம் முன் பின்னாக வருகின்றன. இதனால் விற்பனையில் போட்டிகிடையாது.

உதாரணமாக; மேற்குக் கரைகளில் மாம்பழம் மார்ச்சு மாதத்திலேயே விற்பனைக்கு வந்து விடுகின்றது. அக்காலத்தில் வேறு மாம்பழமே இராது. அதனால் அதற்குக் கிராக்கி ஏற்படுவது இயல்புதானே! நீலம் என்ற பழம் எல்லா ரகங்களும் பட்டம் தீர்ந்த பிறகு அகாலத்தில் விளைந்து சந்தைகளுக்கு வருவதுண்டு. அப்பொழுதும் அதற்குக் கிராக்கி இருக்கும்.

மாம்பழம் போலவே ஆரஞ்சு முதலியவற்றிலும் ஒவ்வொரு ரகத்துக்கும் ஒவ்வாரு காலத்தில் விலை கூடி வருகிறது.

2. ஒரு மரத்திலும் உற்பத்தி விகிதம் அதிகம்: வேறு நாடுகளில் ஒரு பழமரம் வருஷத்தில் எத்தனை பழங்களைத் தருகின்றன என்று கணக்கெடுப்போம். அதனால் சில பழமரவகைகள் நம் நாட்டிலேயே அதிசயமான பலனை அளித்து வருவது புலனாகும். நம்நாட்டு வாழையில் ஒரு குலையில் உள்ள காய்களின் கணக்கு வேறு நாட்டு வாழைக் குலையின் கணக்கைவிட அதிகமாகும். திராக்ஷை நம் நாட்டுக்குப் புதியது. ஆனால் இங்கே அது பயிராகி நம் நாட்டுச் சூழ்நிலை அதற்கு ஒத்துப்போய் விட்டது.

இப்பொழுது திராக்ஷைக் கொடியில் வருஷத்தில் கிடைக்கக்கூடிய பழங்களின் காய்ப்பைக் கணக்கெடுத்தால், நம் நாட்டில் இருப்பது போல் உலகத்திலேயே வேறு எங்கும் இவ்வளவு உயர்ந்த விகிதம் இல்லையாம். மாம்பழத்திலும் இப்படியே. நம் நாட்டு மண்ணும் கால இயல்பும் பழ மரங்களுக்கு ஏற்றவையாக அமைந்திருப்பதே இதற்குக் காரணம்.

3. செலவுகள் குறைவு: பழத்தோட்டம் போடுவதற்கு எத்தனையோ துறைகளில் செலவேற்படக்கூடும்அல்லவா? பல இடங்களில் நம் நாட்டில் நீர் இறைப்பு அதிகமின்றியே பருவ மழையினால் பல பழங்கள் விருத்தியாகி விடுகின்றன. வேறு நாட்டில் வேலையாட்களுக்குத் தரும் கூலியைவிட இங்கே தரும் கூலி குறைந்தது. நம் நாட்டுத் தோட்டக்காரர்கள் உழைப்பாளிகள். அதனால் ஆட்களை அமர்த்தாமல் பல இடங்களில் சொந்தக்காரர்களே உற்பத்தியைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பெருக்கி வருகிறார்கள்.

4. தோட்டம் போடுவோருக்கு

பழத் தோட்டத்தைத் தொடங்குவோர் தொடங்குவதற்கு முன் அறிந்திருக்கவேண்டிய செய்திகள் சில உண்டு. அவற்றை அறிந்து கொண்டு முன் எச்சரிக்கையுடன் இத் தொழிலில் இறங்கினால் பிறகு தொந்தரவு அதிகம் இராது. அச்செய்திகளை இங்கே ஆராய்வோம்.

இடை விடாத உழைப்பு

1. பழச் செடி விஷயத்தில் ஒவ்வொரு தனிச் செடியைப் பற்றியும் தோட்டக்காரர் கருத்துக்கொள்ள வேண்டும். பழச்செடியை அரசர் வீட்டுக் குழந்தையைப் போல் காப்பாற்றவேண்டும்.

2. விதை போட்டு நாற்று வந்ததும் செடியைக் கூடைக்கு மாற்றி அதனை நல்ல மரத்தின் கிளையோடு ஒட்டுச் சேர்க்கவேண்டும். விதையின் மூலம் பயிர் செய்யாவிடில் புதிய முறையில் அதனைத் தயாரிக்கவேண்டும். பதியமும் ஒட்டுமே சிறந்தவை; விதைகளால் உற்பத்தியாகின்றவை மட்டமானவை: அத்தகைய செடிகளின் பழங்கள் தாய்ச்செடியின் பழங்களைப்போல் ருசியாக இருக்குமென்று உறுதி கூற முடியாது.

3. ஒட்டுச் செடியை உரிய இடத்தில் நடும்போது கவனிக்கத்தக்கவை பல உண்டு. பாத்தியின் தயாரிப்பும் அமைப்பும், செடிகளின் இடைவெளி, செடி வரிசைகளின் இடைவெளி, ஏற்ற பருவம் இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு நட வேண்டும்.

4. நட்டபின் செடியின் விஷயத்தில் நல்ல கவனம் அவசியம். பழச் செடியில் எந்தப் பிராயத்திலும் பூச்சி விழுதல் இயல்பு. ஈரம் மிகுதியானல் பூஷாண நோய் தோன்றக்கூடும். பூச்சிகளைத் தேடிப்பிடித்து அப்பொழுது அப்பொழுது அகற்றி விடவேண்டும். நோய்ச் செடிகளைக் களைந்துவிட்டு அவை இருந்த இடத்தைச் சுத்தம் செய்து வேறு புதிய செடிகளை நட வேண்டும். பூச்சிகளுக்கும் பூஷாண நோய்களுக்கும் ஏற்ற மருந்துகளை அறிந்து உபயோகித்துப் பரிகாரம் தேடவேண்டும்,

5. மரம் பழுக்கத் தொடங்கிவிட்டால் அணில் வௌவால் முதலியவற்றின் உபத்திரவம் அதிகமாகும். அவைகளைத் தடுக்க ஏற்பாடு செய்தல் அவசியம்.

6. ஒவ்வொரு வகைப் பழத்துக்கும் பறிப்பு முறையும் சேமிப்பு முறையும் வேறுவேருக இருக்கும். அவற்றை அறிந்துகொள்ளவேண்டும்.

7. பறித்த பழங்களை நீண்ட நாள் போட்டு வைப்பதற்கில்லை. உடனுக்குடன் விற்க ஏற்பாடு செய்யாவிடில் அவை அழுகி நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

பழத்தோட்டக்காரர்களுக்கு இந்தமாதிரி இடைவிடா உழைப்பு இருக்க வேண்டுவது அவசியம்.

லாபம் தொலைவில்

ஒருவர் ஆரஞ்சுத்தோட்டமோ மாந்தோப்போ அமைப்பதானுல் தொடக்கத்தில் கையிலுள்ள முதலைப் போட்டுப் பல வேலைகள் செய்தல் இன்றியமையாததாகும். செடிகள் பெரியனவாகிப் பலன் தருவதற்குச் சில வருஷங்கள் செல்லும். அக் காலம் வரையில் அவர் ஒருவித லாபத்தையும் எதிர்பார்த்தல் இயலாது. ஆனுல் அவற்றின் பாதுகாப்பு விஷயத்திலோ மேலும் மேலும் செலவு செய்து கொண்டே யிருக்கவேண்டும். அத்தோட்டம் பலன்தரத் தொடங்கிவிட்டால் பிறகு இத்தனை வருஷம் எடுத்துக் கொண்ட உழைப்புக்கும் போட்டபணத்துக்கும் ஊனமில்லாமல் தோட்டக்காரர் ஊதியம் பெறுதல் நிச்சயம். செடி பலன் தரத் தொடங்கியதிலிருந்து வரவரச் செலவினம் குறைகிறது. வருவாய் அதிகமாகிறது. போடுமுதல் அதிகம் இல்லாமல் லாபம் கிடைத்து வருவதை நோக்கும் போது பயிர் வேளாண்மையை விடப் பழ வேளாண்மையே மிகுந்த லாபகரமான தென்பது விளங்கும். எனினும் நீண்ட காலம் காத்திருக்கப் பலருக்குப் பொறுமை இல்லை. தானியப் பயிர் முறையில் உடனுடன் மகசூல் கிடைத்துவிடுவதால் அந்த வேளாண்மையையே பலர் விரும்புகிருர்கள். ஒரு குழந்தை இருக்கிறது. பெற்ருேர் அதை மிகவும் சிரமப்பட்டு வளர்த்து வருகிருர்கள். பாலப்பருவத்தில் குழந்தையைப் படிப்பிப்பதிலும், ஜீவன மார்க்கத்தைத் தேடித்தருவதிலும் பெற்ருேருக்கு எவ்வளவோ செலவாகிறது. பையன்

பெரியவனாய்த் தன் சம்பாத்தியத்தினால் பெற்றோரைத் தாங்குகிறான். இந்த வகையில் பழத்தோட்டமும் பிள்ளையும் ஒன்றுதான்.

பழக்கம்

பழத்தோட்டக்காரருக்குப் புத்தக அறிவு எவ்வளவோ துணை செய்யக் கூடும். எனினும் புத்தக அறிவு ஒரு சாதகமே அல்லாமல் அதுவே சிறந்த திறமையைத் தந்துவிடாது. புத்தகங்களைப் படித்துவிட்டு அனுபவ ஞானமின்றிப் பழத்தோட்டம் போடுவது சாத்தியமில்லை. பதியமுறையும் எவரும் லகுவில் பழகிக் கொள்ளக்கூடியதே. படிப்பே இல்லாத குடியானவர் பலர் இவற்றை நன்றாகச் செய்து வருகிறார்கள். கிளை வெட்டு (Pruning) முறையும், மருந்து தெளித்தலும் பழக்கத்தினால் எளிதில் கைகூடத் தக்கவையே. எனவே பழத்தோட்டம் போடுகிறவர்கள் பல இடங்களில் உள்ள பழத்தோட்டங்களுக்குச் சென்று அங்கங்கே உள்ளவர்கள் செடிகளை எவ்விதம் பயிரிட்டு வருகிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். பழக் காட்சிகள் (Fruit Shows) நடைபெறும் இடங்களுக்குச் சென்று பல விவரங்களை அறிந்து கொள்ளலாம். இவ்விதமாக ஒருவருக்குப் பழக்கம் மிகவும் முக்கியமாகும்.

5. வியாபாரத் தோட்டம்

வியாபாரத் தோட்டங்களின் வகை: சில்லறை வியாபாரத் தோட்டம், மொத்த விற்பனைத் தோட்டம் என்று தோட்டங்கள் இரண்டு வகைப்படும். பெரிய நகரங்களுக்கு அருகில் இருப்பவரும், தாங்களாகவே பழங்களைத் தெருக்களிலும் தினச் சந்தைகளிலும் சில்லறையாக விற்க வசதி இருப்பவர்களும் பல ரகச் செடிகளை வைத்துக் கொள்ளலாம். மா, பலா, கொய்யா, ஆரஞ்சு, சபோடா, திராக்ஷை

முதலிய பல விதமான தாவரங்கள் இருந்தால் தோட்டத்தில் வருஷம் பூராவும் ஒன்று போக ஒன்று பலன் தரக் கூடும். அதனுல் சில்லறை வியாபாரம் ஆண்டு முழுவதும் தொடர்ந்திருக்கும். வருவாய் இடைவிடாமல் சில்லறை சில்லறையாக வரும். அன்றை ஜீவனத்துக்கு இது ஒரு வழி. ஆனுல் அதிக விஸ்தீரணத்தில் நிலங்களை உடையவர்களுக்குச் சில்லறை வியாபாரம் அவ்வளவு சிறந்ததல்ல. பழச் சாகுபடியை ஓர் உப தொழிலாகக் கருதுகின்றவருக்கே சில்லறை வியாபாரம் எடுத்தது.

பெரிய அளவில் தோட்டம் போடுகிறவர் ஒரு பழத்தையே மனத்திற் கொள்ள வேண்டும். அது மாந் தோட்டமோ மற்றும் எதுவாயினும் சரி, ஒரு வகைதான் லாபந் தரக் கூடியது. அவர் கவனமெல்லாம் அந்த ஒரு பழ உற்பத்தியில் செல்லட்டும்; அந்த ஒரு துறையில் அவருக்குக் கலை அனுபவம் ஏற்படட்டும். அவர் உழைப்புப் பல்வேறு பருவங்களில் பலன் தரும் பல பல ஜாதி மரங்களின் வளர்ச்சியில் சிதறிப் போகாமல் ஒரு பழ உற்பத்தியில் சென்ருல் அவருக்கு வெற்றி நிச்சயம். மொத்த வியாபாரத்துக்கு அதிகப் பழங்களை அவர் அப்பொழுது உற்பத்தி செய்யமுடியும். உற்பத்தி செய்கிறவற்றை லாரிகள் மூலமாகவோ, புகை வண்டி மூலமாகவோ எளிதில் தூரச் சந்தைகளுக்கு அனுப்ப இயலும். இந்த வசதிகளினுல் ஒரு பழ உற்பத்தி முறையே விற்பனைத் தோட்டக்காரருக்கு ஏற்றது.

ஒரு பழ உற்பத்தியிலும் தோட்டம் போட உத்தேசிக்கிறவர் தாம் இருக்கும் இடத்தில் எந்தப் பழம் நன்ருக உற்பத்தியாகும்? அப்பிரதேசத்தில் எந்தப் பழங்களுக்குக் கிராக்கி இருக்கிறது? அங்கே அவருக்குப் போட்டி இருக்கிறதா? குறித்த அந்த ஒரு பழ உற்பத்தியில் அவருக்கு உத்தேசமாக எவ்வளவு லாபம் வரக்

கூடும்? இவைகளை எல்லாம் நிதானமாக ஆராய்ந்து கொண்டு ஒரு பழத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கும் பழத்திலும் பல ரகங்கள் இருக்கின்றனவே! இவற்றில் வியாபாரத்துக்காக உற்பத்தி செய்ய இரண்டொரு ரகங்களே தகுதி யுடையனவாக இருக்கலாம். கெட்டியானதாகவும், காய் நிலையில் பறித்துப் பழுக்க வைப்பதற்கு விரைவில் பழுக்காததாகவும், தூர தேசத்துக்கு அனுப்பும் போது வழியில் கெடாததாகவும், கிராக்கி மிகுதியாக உள்ள ராசியாகவும் அது இருக்க வேண்டும். உதாரணமாக மாம்பழத்தை எடுத்துக் கொள்ளுவோம். இதில் ரசம் மிகுந்துள்ளவை ஒரு ஜாதி; சதைப் பற்று உறுதியானவை மற்றொரு ஜாதி. நீலம், பங்களூரா முதலியவை பின் ஜாதியைச் சேர்ந்தவை. பறித்தவை நீண்ட நாள் கெடாமலிருக்கும். தூர தேசங்களுக்கு அனுப்பும் போது இவை அதிகமாகக் கெட்டுப் போகமாட்டா.

விற்பனைத் தோட்டக்காரருக்குப் பழ விற்பனையில் மாத்திரம் அல்லாமல் வேறு வழிகளில் லாபம் பெறவும் வழிகள் இருக்கின்றன. அவர் நாற்றுச்செடி விற்பனை, ஒட்டுச்செடி விற்பனை இவற்றின் மூலம் நல்ல வருவாயையும் பெறக்கூடும். பழ மரங்களின் இடையில் சிறு காலப் பயிர்களாகிய காய்கறிகளைப் பயிர் செய்து விற்கலாம். தேனிக்கள் பழத் தோட்டங்களை விருத்தியாக்குகின்றன. பழத் தோட்டம் வளர்ச்சியுறுவதால் தேனிக்கள் பின்னும் விருத்தியாகி நமக்கு மிகுதியாகத் தேன் கிடைக்கிறது.

விற்னைபத்தோட்டக்காரர்கள் தாம் இருக்கும் நிலத்தின் இயற்கைக்குப் பணிந்து போவது நல்லது. தமக்குப் பழக் கலையில் திறமை இருக்கிறதென்று நினைத்து இயற்கையை எதிர்த்து அதற்கு விரோதமாகப் புதிய ரகங்களைப் பயிர் செய்யக் கூடாது. இது விஷப் பரீக்ஷையே ஆகும்.

6. பறிப்பு, சேமிப்பு முதலியன

1. பறிப்பு

பழங்களில் மூன்று நிலைகள் உண்டு. ஒன்று காய் நிலை; மற்றொன்று தீங்காய் நிலை; வேறொன்று கனி நிலை; காய் நிலையில் பறித்த பழங்கள் ஊறுகாய்க்கோ, கறிப் பக்குவங்களுக்கோதான் பயன் படும். தீங்காய் நிலையில் பறித்தவற்றைச் சேமித்து வைத்தால் அவை சில நாட்களில் பழுக்கக்கூடும். காய் நிலையில் பழத்தில் காடிச்சத்து மிகுதியாக இருப்பதனால் அது புளிக்கிறது. பழுக்கப் பழுக்க இந்தக் காடிச்சத்து சர்க்கரையாக மாறிப் பழம் இனிமையை அடைகிறது. காடிச்சத்து சர்க்கரையாக மாறுவது பழம் மரத்தில் இருக்கும்போதுதான் என்பதில்லை; தீங்காய் நிலையில் பறிக்கப் பட்டவைகளில் கூடக்காடிச்சத்து சர்க்கரையாக மாறுகிறது. அன்னாசிப் பழம் ஒன்றுதான் இந்த விதிக்கு விலக்கானது. தீங்காய் நிலையில் பறிக்கப் பட்ட அன்னாசி பிறகு பழுப்பதே இல்லை. பழங்களைத் தீங்காய் நிலையில் பறித்தால்தான் தூரச் சந்தைகளுக்கு அவற்றை அனுப்ப அவகாசம் இருக்கும்.

பழங்கள் தீங்காய் நிலையை அடையும் சமயம் பார்த்து மரத்துக்கு நீர் பாய்ச்சுவதை முற்றும் நிறுத்தி விட வேண்டும். அச் சமயம் நீர் பாய்ச்சினால் பழம் புளிப்பாய் விடும். நம் நாட்டுப் பழங்களில் மழைக்கால ஜாதிகள் புளிப்பாகவும், வெயிற்கால ஜாதிகள் இனிப்பாகவும் இருப்பதற்கு நம் நாட்டு மழையே காரணமாகும்.

நம் நாட்டில் திராக்ஷைத் தோட்டக்காரர் பலர் பழம் பறிப்பதற்கு முதல் நாள் கொடிகளுக்கு நிரம்ப நீர் பாய்ச்சி விடுகிறார்கள். ஜலம் பாய்ச்சிய மறுநாள் பழங்களைப் பறித்துத் தராசில் நிறுத்திப் பார்த்தால் அவற்றின் எடை சற்று அதிகமாக இருக்கும். இந்த அற்ப

லாபத்தைத் திராக்ஷைத் தோட்டக்காரர் கருதுவதனால், அவர்களுடைய பழங்கள் புளிப்பாக இருக்கின்றன.

2. சேமிப்பு

பழத்தின் இயல்பைப் பொறுத்துச் சேமிப்பு முறை வேறுபடும். எந்தப் பழத்தையும் உபயோகிப் பதற்குமுன்நீரில் கழுவக் கூடாது. மண்ணும் சேறும் படிந் திருந்தால் துடைத்து விடவேண்டும். பழத்தின் மேல் ஜலம் பட்டால் பூஷாண நோய் அதை எளிதில் பற்றிக் கொள்ளக்கூடும். அழுகிப் போனவற்றையும், நோயுற்ற பழங்களையும் தனியே பிரித்து, மற்ற பழங்களுடன் சேர்க் காமல் அப்புறப் படுத்திவிட வேண்டும்.

மாம்பழம், பலாப்பழம் போன்றவைகளை வைக்கோற் பாயலின் மேல் பரவலாக வைக்க வேண்டும். வைக்கோலைப் போட்டு மூடினால் இவை விரைவில் பழுக்கக் கூடும்.

ஆரஞ்சு, சபோடா, பப்பாளி போன்றவற்றை மரத் தட்டுகளில் பரவலாக வைத்து விடலாம். இவை களைக் குவியலாகக் கிடத்தக் கூடாது.

வாழை முதலிய சில பழங்களுக்கு அவை சேமித்து வைக்கும் அறை காற்றோட்டமே இல்லாமல் புழுங்கலாக இருக்கலாம். ஆனால் நம் நாட்டில் பெரும்பாலான பழங் கள் சூரிய வெளிச்சம் நன்றாகப் பட்டால்தான் நிறம் முதலிய நல்ல தன்மைகளைப் பெற்றுப் பழுக்கின்றன. தக்காளி இதற்கு ஓர் உதாரணம்.

சேமிப்பறையில் அணில், எலி முதலியவை நுழை யாதபடி ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. விற்பனை நுணுக்கங்கள்

விற்பனை ஒரு கலை. இக்கலை நுணுக்கத்தைப் பழத் தோட்டக்காரர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தரப்

படுத்துதல் (Grading) ஒப்பந்த ஒழுங்கு, விலை நில வரங்களை ஆராய்தல், நாணய முறை, வாங்குவோருக்கு வசதிகளை அமைத்துக் கொடுத்தல் முதலியன இந்த நுணுக்கங்களை ஒட்டியவை

1. தரப் படுத்துதல்; தோட்டக்காரர் தம்மிடமுள்ள பழங்களை ஜாதிக்குத் தக்கவாறும், வடிவு நிறம் சுவை முதலியவைகளுக்கு ஏற்பவும் வேறு வேருகப் பிரித்து வைக்க வேண்டும். எந்த ரகத்துக்குக் கிராக்கி அதிகமோ அதனைத் தனியே வைக்க வேண்டும்.

2. ஒப்பந்த ஒழுங்கு: அடுத்தபடி முக்கியமானது வாடிக் கைக்காரராகிய வியாபாரிகளிடம் செய்துகொள்ளும் ஒப்பந்தமாகும். பல சந்தைகளில் மட்டமான ரகங் களுக்குத்தான் கிராக்கி. பெரிய நகரங்களில் உயர்ந்த ரகங்களுக்குக் கிராக்கி ஏற்படலாம். ஆகவே, மொத்த வியாபாரிகளுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது, அவர்கள் நம் பழங்களை விற்கும் சந்தைகளின் இயல்பை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த அறி வின் பேரிலேதான் இன்ன வகையை இன்ன வியாபாரிக் குத் தரலாம் என்று நிர்ணயம் செய்து கொள்ள முடியும்.

ஒரு சந்தையிலுள்ள இரண்டு வியாபாரிகளுடன் நாம் ஒப்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது. அதனுல் அச் சந்தையில் நம் பழங்களுக்குள் போட்டி ஏற்பட்டு இறுதியில் நம் வியாபாரம் பாதிக்கப்படும்.

3. சந்தைகளைப் பற்றிய அறிவு: பல சந்தைகளுக்கு நாம் ஒரு வகைப் பழத்தையே அனுப்பி வருவதாக வைத்துக் கொள்வோம். சில சந்தைகளில் சில மாதம் விலை வாசிகள் உயர்ந்திருக்கும். சில சமயம் விலை படுத்துப் போய்விடும். விலை படுத்து விட்டதே என்றெண்ணி அத்தகைய சந்தைக் குப் பழம் அனுப்பாமல் இருந்து விடலாகாது. இச் சந்தர்ப் பத்தில் அதிகமாக அனுப்பாமல் குறைத்து அனுப்பலாம்.

2290

நம் பழங்கள் எப்பொழுதும் சந்தையில் விற்கப்படுகின்றன என்ற எண்ணம் வாடிக்கைக்காரர்களிடம் இருந்து வருதல் நமக்கு ஒரு நல்ல விளம்பரமாகும்.

பருவத்துக்கு முன் பழுக்கும் பழங்களும் (Early Varieties), பருவம் தீர்ந்த பின் பழுக்கும் பழங்களும் (Off Season Varieties) அகாலப் பழங்கள் எனப்படும். எங்கும் போட்டி இல்லாத காலத்தில் இவை விற்க வருவதால் இவைகளுக்கு விலை கூடிவரும். அதனால் விலை வாசிகள் உயர்ந்துள்ள சந்தைகளுக்கே நாம் அகாலப் பழங்களை அனுப்ப வேண்டும். இதனால் தோட்டக்காரருக்குச் சந்தைகளின் விவரங்கள் தெரிவது அவசியமாகிறது.

4. நாணய முறை: பழங்களைத் தரப்படுத்துவதிலும், கட்டி அனுப்புவதிலும், விலை நிர்ணயத்திலும் தோட்டக்காரர் உண்மையைக் கடைபிடிக்க வேண்டும். ஏமாற்றம் உதவாது. அதனால் பெயர் கெட்டு விடும். சிலர் ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் நல்ல பழங்களை அனுப்பி விட்டு, மேற் கொண்டு அனுப்பும் போது மட்டமானவற்றை முன் விலைக்கே அனுப்பி விடுவதுண்டு. இதனால் நாணயம் கெட்டு விடும்.

5. வியாபாரிகளுக்கு வசதிகளை அமைத்துக் கொடுத்தல்: பழங்களை அனுப்பும் போது அவைகளைக் கூடைகளிலோ வேறு வகையிலோ அனுப்பும் வசதிகளை வியாபாரிகளுக்குத் தோட்டக்காரரே செய்து தர வேண்டும். செல்லும் வழியில் பழங்கள் சேதமடையாமல் பத்திரமாகச் செல்லும்படி அனுப்பும் தோட்டக்காரருக்குத்தான் வாடிக்கைக் காரர்களின் அபிமானம் மிகுதியாக இருக்கும்.

தென்னாட்டிலே பழ உற்பத்தி பெருக நம் தோட்டக்காரர்கள் இந்த விஷயங்களை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

7. பதனிடும் தொழில்

கிராமங்களில் உற்பத்தியாகும் பழங்களுக்குப் போக்குவரவு சாதனங்கள் இல்லாத குறைவினுல் அவை பெரிய சந்தைகளுக்குச் செல்வதில்லை. உள்ளூர்களிலேயே தோட்டக்காரர் அவைகளைக் குறைந்த விலைக்கு விற்றுவிட வேண்டியவர் ஆகிருர். அதனுல் லாபம் கிடைப்பதில்லை. லாபமில்லாத ஒன்றை எவரும் நீடித்து நடத்துவார்களா? அதனுல் கிராமங்களில் பழஉற்பத்தி அது வளர்ச்சியுற வேண்டிய அளவு வளர்ச்சி பெறவில்லை. கிராமங்களில் உள்ளவர்களால் பழ உற்பத்தி பெருகவேண்டுமாஞல் கிராம மக்களின் பழங்களுக்கு நல்ல சந்தைகள் அவசிய மாகின்றன. பழங்களைப் பக்குவப்படுத்திப் பதனிட்டு நீண்ட காலம் சேமித்து வைக்கும் முறை வளர்ச்சியுற்ருல் அம்முறையைப் பற்றிய தொழில்கள் எங்கும் பெருகும். அப்பொழுது கிராமத்தார் விளைவிக்கும் பழங்களுக்கு அவசியம் ஏற்படும். இதனுல் பழஉற்பத்தி பெருகுவதற்குப் பதனிடும் தொழில் வளர வேண்டும் என்பது விளங்கும்.

பழங்களைப் பதனிட்டுச் சேமித்துவைக்கும் விதங்கள் பலவாகும். பழங்களின் சாற்றைக் காற்றுப் படாமல் வைத்துச் சேமித்தல், பழங்களை வெல்லப்பாகு முதலியவற்றில் வைத்துப் போற்றல், 'ஜாம்' என்ற பொருளாகவும் வேறு விதமாகவும் மாற்றல், டப்பாக்களில் அடைத்து வைத்தல் முதலிய முறைகள் இக்காலத்தில் வளர்ச்சியுற்றுள்ளன. நம் நாட்டில் இவைகளின் வளர்ச்சி போதாது. இது இப்பொழுதுதான் சில வருஷங்களாகத் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

தென்னுட்டுப் பழங்களில் ரசம் அதிகமில்லாத நீலம், பங்களூரா முதலியவற்றை டப்பாக்களில் அடைத்து வைக்கலாம். சாறு நிறைந்த நாரத்தை, எலுமிச்சை,

திராக்ஷை முதலியவற்றைச் சாறுகளாகச் சேமிக்கலாம். எல்லா வசதிகள் இருந்தும் பதனிடும் தொழில் இதுகாறும் வளர்ச்சியுறவில்லை. இந்தியாவிலேயே இத்தொழில் பெருகுமானால் தென்னிந்தியாவின் பழங்களுக்கு வேறு மாகாணங்களில் மிகுந்த கிராக்கி இருக்கும். அப்பொழுது தோட்டக்காரர் பழங்களை அதிகமாக விளைப்பார்கள். அவர்களுக்குப் பயிர்முறை வசதிகளைச் செய்துகொடுக்கும் செடி விற்பனைக் கடைகள் முதலியவை விருத்தியாகும். அதனால் நல்ல ரகச் செடிகளையே தோட்டக்காரர் பயிரிடுவது அப்பொழுது எளிதில் சாத்தியமாகலாம்.

நம் நாட்டு விவசாய நிலையை ஆராய்ந்து துரைத்தனத்தாருக்குப் பலவகை சிபார்சுகளைச் செய்த அரசியல் விவசாயக் குழு (Royal Commission of Agriculture) 1928இல் இங்கே தோட்டக் கலையை மிகுதியாக விருத்தி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அரசாங்கம் இத்துறையைப் புறக்கணித்துவிட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அவசியமாக இருந்த பருத்தி, கரும்பு, எண்ணெய் விதைகள் இவற்றின் உற்பத்தியிலேயே கவனத்தைச் செலுத்தி வந்தது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியபிறகுதான் அதற்கு விழிப்பேற்பட்டது. இப்பொழுது சுதந்திரம் வந்துவிட்டதனால் பழ உற்பத்தியும் பதனிடும் தொழிலும் சேர்ந்தாற்போல் பெருவதற்கு ஏற்ற வழிகளைச் சுதந்திர அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. வருங்காலத்தில் தென்னாட்டில் பழ உற்பத்தி நிச்சயமாக வளர்ச்சியுறும்.

National Art Press, Madras—18

ச. கு. கணபதி ஐயர் எழுதிய நூல்கள்

தோட்டக் கலை	4	0
காய்கறிப் பயிர்முறை	2	8
கோழிப் பண்ணை	2	0
சிங்காரத் தோட்டம்	.2	0
தென்னை வளர்ப்பு	1	4
தேனீ வளர்ப்பு	1	4
கிராமக் கூட்டுறவு	0	10
தென்னிந்திய வேளாண்மை	1	12
வீட்டு ரோஜா	0	6
இங்கிலீஷ் காய்கறிகள்	0	3
கோழி முட்டை உற்பத்தி	0	3

GRAMA JOTI NOOLAGAM
4. SYED AHAMED HUSSAIN STREET
MYLAPORE :: MADRAS-4

National Art Press, Madras-18